சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி பெ.ஆனந்தி, த/பெ. காலஞ்சென்ற திரு.எஸ்.பெருமாள் – தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.16 நாள் : 30.05.2019
விகாரி– வைகாசி : 16
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டன:

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை, பொதுப்பணித் துறை கடித எண்.எஸ்3(4)/ 64874 /2012, நாள் 31.12.2014.
2. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
3. அரசு கடித எண். 391/பி1/2015, நாள் 25.05.2017.
4. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை கடிதம் எண்.எஸ்3(4)/64874/2012, நாள் 27.03.2018.
5. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.

-----

ஆணை:

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கடலூர் நிலநீர் கோட்டத்தில் துணையாளராக பணிபுரிந்து வந்த திரு. எஸ்.பெருமாள் 23.05.2002 அன்று இயற்கை எய்தியதையடுத்து, அவரது மகள் திருமதி பெ.ஆனந்தி என்பவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு 11.05.2012 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், இவரது பணியினை இவர் பணியில் சேர்ந்த நாளான 11.05.2012 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கருத்துருவை ஆய்வு செய்ததில், திருமதி பெ.ஆனந்தி 09.01.1985 அன்று பிறந்துள்ளார். இவரது தந்தை 23.05.2002 அன்று இயற்கை எய்தியுள்ளார். இவரது தந்தை இறந்த மூன்று வருடங்களுக்குள் தனியரின் தாயார் திருமதி பி.சாந்தி தனது மூத்தமகள் செல்வி பெ.காந்திமதி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கிட கோரி 12.08.2002 அன்று விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். பின்னர்

செல்வி பெ.காந்திமதிக்கு திருமணம் செய்ய உள்ளதால் இரண்டாவது மகள் செல்வி பெ.ஆனந்திக்கு பணி வழங்கிட 21.04.2003 அன்று விண்ணப்பித்துள்ளார். தனியர் மார்ச் 2000–இல் எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் தட்டச்சர் பதவிக்குண்டான கல்வித் தகுதியான தமிழ் தட்டச்சில் கீழ்நிலை (Junior Grade) பிப்ரவரி 2009–யிலும் மற்றும் ஆங்கில தட்டச்சில் மேல்நிலை (Senior Grade) ஆகஸ்ட் 2008–யிலும் தேர்ச்சிப் பெற்றுள்ளார். அதனடிப்படையில், தனியருக்கு விண்ணப்பம் அளித்த நாளுக்குப் பின்னர் பெற்ற கல்வித் தகுதியின் அடிப்படையில் தற்காலிக தட்டச்சராகப் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977–இல் பத்தி 6–ற்கு முரணானதாகும்.

3. இந்நிலையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை வெளியிடப்பட்டதால், இந்த அரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், பின்னர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்கும்படியும் முதன்மைத் தலைமைப் பொறியாளர்(கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), அவர்கள், அரசு கேட்டுக் கொண்டபடி அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–ன்படி தனியரை தற்காலிக தட்டச்சராகக் கருதி இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகளை வழங்கியபின், தனியர் கருணை அடிப்படையில், தற்காலிகமாக தட்டச்சராகப் பணியேற்ற நாளான 11.05.2012 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உரிய ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப் பட்டுள்ளது.

6. இந்நிலையில், பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்த நாளுக்குப் பின்னர் பெறப்பட்ட கல்வித் தகுதியின் அடிப்படையில் தனியருக்கு தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள செயல், அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977–இல் பத்தி 6–இல் வெளியிடப்பட்டுள்ள தெளிவுரைகளுக்கு முரணானது என்பதால், இந்த அரசாணையின் பத்தி 6–க்கு இத்தனியர் பொருட்டு விலக்களித்து, கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில், தட்டச்சர் பதவியில் நியமனம் செய்யப்பட்ட திருமதி பெ.ஆனந்தி அவர்களின் பணியினை அப்பணியிடத்திற்குரிய உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 11.05.2012 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்நாளிட்டு பணிவரன்முறை செய்வதால் ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

7. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அ.சா. எண்.2826/க்யூ2/2019–1, நாள்.11.03.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்(ஜி) துறை, அ.சா.எண்.8679/ஜி2/2019, நாள்.14.03.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். கே. பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, சென்னை–9.
திருமதி பெ.ஆனந்தி, தட்டச்சர்
(முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, சென்னை–9 வழியாக)
மாநில கணக்காயர்,சென்னை–18.
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை /
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்